

# தயாளகுணம்

— சகோதரி.நிஜா கென்னடி

*தயாளகுணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான், தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான்.*

*- ஏசாயா 32 : 8*

தயாள குணமென்றால் மற்றவர்களுக்கு தாராளமாக கொடுக்கக்கூடிய மனது. மற்றவர்கள்மீது அன்பிருந்தால் மாத்திரமே நாம் கொடுக்கிறவர்களாக மாறுவோம். மற்றவர்கள் வாழ்க்கையில் உள்ள கஷ்டங்கள், போராட்டங்கள் மற்றும் இவற்றினால் அவர்களுடைய இருதயம் படும் வேதனைகளை நாம் உணர்ந்தால் மாத்திரமே இந்த தாராள மனது நமக்கு வரும். சுயநலமுள்ளவர்களுக்கு இந்த தாராள மனப்பான்மை அறவே இருக்காது. கொடுக்கும் மனப்பான்மையுள்ளவர்களின் வாழ்க்கை செல்வ செழிப்புள்ளதாய் மாறும்.

தன்னிடம் உதவிகேட்டு வருபவர்களுக்கு தயாளகுணமுள்ளவர்கள் தங்களை மறைக்க மாட்டார்கள். கொடுக்காமல் இருப்பதற்கு பொய் காரணங்களைத் தேட மாட்டார்கள். எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக இருப்பார்கள். மற்றவர்கள் அவர்களை அணுகுவதற்கு பயப்படமாட்டார்கள். மற்றவர்கள் மத்தியிலே அவர்கள் கனம் பெற்றவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய மனதிலே மிகவும் உயர்ந்திருப்பார்கள். வேதத்திலே அப்போஸ்தலர் பத்தாம் அதிகாரத்தில் கொர்நேலியு என்பவனைக் குறித்து இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது : அவனது ஜெபங்களும், தானதருமங்களும் கர்த்தருடைய சந்நிதானத்தை வந்து எட்டினது என்று. நமது ஜெபங்கள் மாத்திரமல்ல, நமது தானதருமங்களும் கர்த்தரால் கவனிக்கப்படுகிறது. நமது ஒவ்வொரு வார்த்தையையும், செயலையும் கர்த்தர் தமது ஞாபகபுத்தகத்திலே தேவதூதர்களைக்கொண்டு பரலோகத்திலே எழுதிவைத்துக் கொண்டிருக்கிறார். இதற்கான பலனை நாம் பரலோகத்தில் போயல்ல, இங்கே பூமியிலேயே நூறத்தனையாக பெறுவோம். நாம் எந்த மனுஷனுக்கு கொடுத்தோமோ அல்லது உதவி செய்தோமோ அந்த மனுஷனிடத்திலிருந்து அல்ல, பரலோகத்தின் தேவன் அதற்கான பலனை நமக்கு தருவார். தம்மையே கொடுத்தவர் மற்றதெல்லாவற்றையும் அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8 : 32).

தேவனை அறியாதவர்களும், தேவனுக்கு பயப்படுகிற பயம் இல்லாதவர்களும், தேவன்மேல் விசுவாசமில்லாதவர்களும் பெருந்தன்மை-யில்லாதவர்களாக, கஞ்சத்தனமுள்ளவர்களாக மற்றவர்களுக்கு கொடுக்கும் மனப்பான்மையற்றவர்களாக இருப்பார்கள். கருமித்தனமுள்ளவர்களாக, ஏமாற்றும் தந்திரகுண-முள்ளவர்களாக, பேராசையுள்ள-வர்களாக, அதிகமாக பணத்தை சேர்த்து வைப்பதிலேயே குறியாக இருப்பார்கள். மற்றவர்களுக்கு கொடுக்கும் தாராள மனப்பான்மையில்லாதவர்களாக இருப்பர். மற்ற-வர்களுக்கு நல்லதை செய்ய வேண்டும் என்ற எண்ணமற்றவர்களாய் காணப்ப-டுவார்கள். இவர்கள் தேவனை அறியாததால், தீமையான காரியங்களைச் செய்வதற்கு திட்டம்போட்டு அநீதியுள்ளவர்களாக நடந்து கொள்வார்கள். தேவனைப்பற்றிய சரியான அறிவு இல்லாததினால் இப்படியாக நடந்து கொள்கிறார்கள். ஜனங்களுக்குரியதை கொடுக்க விடாமல் அவர்களுக்குரியதை ஏமாற்றி எடுத்துக்கொள்ள வஞ்சகமாக திட்டமிடுவார்கள். மற்றவர்களை அழித்தாவது தாங்கள் நன்றாயிருக்க விரும்புவார்கள். மற்றவர்களுக்குரியதை அபகரிப்பதிலேயே குறியாயி-ருப்பார்கள்.



*மூடன் இனி தயாளன் என்று மதிக்கப்படான் ; லோபி இனி உதாரன் என்று சொல்லப்படுவதுமில்லை.*

*- ஏசாயா 32 : 5*

நாபால் என்னும் மனுஷன் மிகப்பெரிய பணக்காரனாயிருந்தான். அவன் அற்பனும், கொடூரமானவனும், அறிவில்லாதவனுமாயிருந்தான். ஆனால் அவனுடைய மனைவி அபிகாயிலோ புத்திசாலியுள்ளவளாக, உதாரகுணமுள்ளவளாக இருந்தாள். அவனுக்கு ஆட்டுமந்தைகள் இருந்தது. அவனுடைய மேய்ப்பர்கள் ஆடுகளை வனாந்தரத்தில் மேய்த்து வந்தனர். தாவீதும் அவனோடு கூட இருந்த ஆட்களும், நாபாலின் மேய்ப்பர்களுக்கு உதவியாகவும், ஆட்டுமந்தைக்கு பாதுகாப்பாகவும் இருந்தார்கள். நாபால் ஆடுகளுக்கு மயிர்கத்திரிக்கும்போது, விருந்து கொண்டாடினான். விருந்து கொண்டாடும்போது, வேலைக்காரருக்கும், உதவி செய்தவர்களுக்கும் வெகுமதி கொடுப்பது வழக்கமாயிருந்தபடியால், தாவீது தன்னோடு கூட இருந்த ஆட்களில் பத்துபேரை, நாபாலிடம் உதவி கேட்கும்படி அனுப்பினான். நாபாலோ அவர்களுக்கு உதவி செய்ய மறுத்து, அவர்கள் மனது வேதனைப்படும்படியாகப் பேசி, அவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் வெறுமையாக அனுப்பினான் (1 சாமுவேல் 25 : 11). தாவீது இதை அறிந்தவுடன் நாபாலின்மேல் கோபம் கொண்டு, “நான் வனாந்தரத்தில் நாபாலின் சொத்துக்களை காப்பாற்றினேன்; அவன் ஆடுகள் தவறிப்போகாதபடி பாதுகாத்து உதவியாயிருந்தேன் ; அவனுக்கு உண்டானதிலெல்லாம் ஒன்றும் காணாமற்போனதில்லை, அவனுக்கு நன்மை செய்தேன், அவன் என்னிடம் தவறாக நடந்து கொண்டான் என்று கூறி அவனைப் பழிவாங்கும்படி சென்று கொண்டிருந்தான். நாபாலின் வேலைக்காரரில் ஒருவன் அபிகாயிலிடம் சென்று, நாபால், தாவீது அனுப்பிய ஆட்களை மனமடிவாகும்படி பேசி அனுப்பியதைக் குறித்தும், தாவீதின் ஆட்கள் தங்களுக்கு நன்மை செய்ததாகவும், எந்த தீமையும் செய்யவில்லை ; எங்களுக்குரியதை ஒன்றும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை; இரவும் பகலும் எங்களை காப்பாற்றி எங்களுக்கு மதிலைப்போல பாதுகாப்பாயிருந்தார்கள்; நாங்கள் மந்தைகளை நடத்திச் செல்லும்போது எங்களுக்கு உதவினார்கள்; ஆனால் நாபால் அறிவீனமாய் நடந்து கொண்டார். நமது எஜமானுக்கும் அவனது வீட்டில் உள்ளவர்களுக்கும் ஆபத்து வந்து கொண்டிருக்கிறது; இப்போது நீங்கள் சிந்தித்து முடிவு செய்யுங்கள் என்று கூறினான். உடனே அபிகாயில் தீவிரமாய் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், ஐந்து சமைத்த ஆடுகளையும் , ஐந்துபடி வறுத்த பயிற்றையும், வற்றலான நூறு திராட்சக் குலைகளையும், வற்றலான இருநூறு அத்திபழ அடைகளையும் எடுத்து கழுதைகள் மேல் ஏற்றி, தன் வேலைக்காரரை முன் அனுப்பி விட்டு, தானும் பின் சென்றாள். அவர்கள் அப்படி சென்று கொண்டிருக்கும்போது,



தாவீதையும் அவனது ஆட்களையும் சந்தித்தார்கள். அபிகாயில் தாவீதைப் பார்த்தவுடன் தீவிரமாய், போய் தாவீதுக்கு நேராக முகங்குப்புற விழுந்துபணிந்து, நாபால் அறிவீனமாய் நடந்துகொண்டதை மன்னிக்குமாறு வேண்டினாள். பாருங்கள்! கணவன், தனக்கு உதவி செய்தவர்களுக்குக்கூட கொடுக்க மனதில்லாதிருந்தான். அவனிடம் எதுவும் இல்லாமலில்லை. அங்கு ஒரு விருந்தே நடந்து கொண்டிருக்கிறது. எந்த ஆடுகளை வைத்து அவன் பணம் சம்பாதித்து, விருந்து கொண்டாடுகிறானோ, அந்த ஆடுகளை தாவீதும் அவனைச் சேர்ந்தவர்களும் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆனால் நாபாலோ தாவீதின் ஆட்களிடம் கடுமையாகப் பேசி, அவர்களுக்கு வேண்டிய உணவை கொடுக்க மறுத்தான். அவர்களை ஏற்றுக்கொள்ளாமல், அவர்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இரக்கமற்று நடந்து கொண்டான். அவ்வளவு பெரிய பணக்காரனாயிருந்தாலும், தனக்கு உதவி செய்தவர்களை போஷிக்கவும், வேண்டியவற்றை வழங்குவதற்கும் மனதில்லாமல் திருப்பி அனுப்பினான்.



நாபாலுக்கோ தாவீதின் ஆட்கள் எல்லோருக்கும் ஏராளமாக கொடுப்பதற்கும், அவர்களை போஷிப்பதற்கும் போதுமான வசதிகள் இருந்தது. ஆனால் அவனோ தாவீது யார்? இந்த ஈசாயின் மகன் யார்? என்று சொல்லி, முன்பின் அறியாதவர்களுக்கு என்னிடத்திலுள்ள அப்பத்தையும், தண்ணீரையும் இறைச்சியையும் கொடுக்கமாட்டேன் என்றான். பாருங்கள் தனக்கு உதவி செய்தவர்களையே மறந்துவிட்டான். ஆனால் அவனது மனைவியோ தாராளமான குணமுடையவளாய் இருந்தாள். இன்னும் தொடர்ந்து இந்த பகுதியை தொடர்ந்து படித்தோமென்றால், தாவீதை இரத்தம் சிந்தாதபடி தடுத்து நிறுத்துவதை காணலாம். நல்ல எண்ணமுள்ளவளாயிருந்தாள். இதுவே பின்னாளில் தாவீதுக்கு அவள் மனைவியாகும்படி அமைந்தது.

## உதாரத்துவமாய் கொடுப்போம்

நாமும் நமக்கு உதவி செய்தவர்களையும், நமக்கு பாதுகாவலாக இருந்தவர்களையும், நம்மை நம் வாழ்க்கையில் உயரவும், முன்னேறச்

செய்தவர்களையும், செழிப்படையச் செய்தவர்களையும் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. நாம் அவர்களை நினைத்து, அவர்களுக்கு தாராள மனப்பான்மையோடு கூட உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இதுவரை நாம் அப்படியாக இல்லையென்றால், நாம் நம்மை மாற்றிக் கொண்டு நமக்கு உதவி செய்தவர்களுக்கு தாராள மனப்பான்மையோடு உதவும் பழக்கத்தை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள் என்று வேதம் கூறுகிறது. பிரியமானவர்களே நாபாலைப் போல இரக்கமற்றவர்களாக, கடின இருதயமுடையவர்களாக, உங்களுக்கு உதவி செய்வதவர்களை மறந்து, அவர்கள் மனது வேதனைப்படும்படியாக பேசி, அவர்களுக்கு உதாரத்துவ குணத்தோடு உதவி செய்யாமல் இருதயத்தை அடைத்துக் கொண்டீர்களா? இன்றைக்கே மனந்திரும்புங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். நாம் கஞ்சத்தனமுள்ளவர்களாக, மற்றவர்களுக்கு கொடுக்காமல் சேர்த்து வைத்து, பணம் நம்மை பாதுகாக்கும் என்று பணத்தை நம்பிக்கொண்டிருந்தோமானால், கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க முடியாது. நம் ஆசீர்வாதத்திற்கு நாமே தடையாகிவிடுகிறோம். தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான் (நீதிமொழிகள் 11 : 28). ஒருவன் கர்த்தரை நம்பாமல், தான் சேர்த்து வைத்த பணத்தை நம்பி, அதையே முழுமையாக சார்ந்து வாழ்ந்தால் அவன் காய்ந்த இலையைப்போல விழுவான். பணத்தை நம்பாமல் கர்த்தரை நம்பி, அவரையே சார்ந்து வாழும்போது, செழிப்பாக வளர்ந்து பெருகுவோம். நாம் தாராள மனப்பான்மையோடு மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதமும் செழிப்பும், மற்ற எல்லா நன்மைகளும் நம்மை வந்து சேரும். நாம் பிசினித்தனம் பண்ணினோமானால், இந்த உலகத்தில் வாழும் நாட்கள் வரை நாம் கஷ்டப்பட்டுக்கொண்டேதான் இருப்போம். மற்றவர்களுக்கு கொடுப்பதற்கு ஆர்வமில்லாமல், விருப்பம் இல்லாமல் கொடுத்தால், கொடுத்ததன் பலனை நாம் அனுபவிக்க முடியாது. சிலர் சேர்த்து வைத்தால் பணக்காரர்களாகி விடலாம் என்றும், மற்றவர்களுக்கு அந்த பணத்தை கொடுக்கும்போது, சேமிப்பு செலவழிந்து போகும், குறைவு வரும் என்று நம்புகிறார்கள். ஆனால் வேதம் என்ன கூறுகிறது என்று பாருங்கள்: கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் பிறருக்கு கொடுக்கிறபடியே தேவனும் உங்களுக்கு கொடுப்பார் (லூக்கா 6 : 38).



*வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு.*

*உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்.*

*- நீதிமொழிகள் 11 : 24,25*

நாம் கொடுக்கிறவர்களாக மாற வேண்டும். மற்றவர்களுக்கு நாம் நன்மை செய்யும்போது, நாமும் நன்மையை பெற்றுக்கொள்வோம். நாம் எவ்வளவு கொடுக்கிறோமோ அவ்வளவு நமக்கு திரும்ப கொடுக்கப்படும். தாராள மனப்பான்மையுள்ளவர்களாக நாம் மாறும்போது, நாம் செழிப்புள்ளவர்களாக மாறுவோம். தாராளமாய் கொடுப்போம், தாராளமாய் பெற்றுக் கொள்வோம்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2). ஒரு மனுஷனுக்கு எவ்வளவு சொத்து, பதவி, புகழ் இருந்தாலும் அவனுக்குள் சமாதானம் இல்லை என்றால் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை. நாம் மனதிலே சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் இருப்பதுவே வாழ்க்கை. இதைத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் உன் ஆத்துமா வாழ்வது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகித்திருப்பாய் என்று குறிப்பிடுகிறான். நம் மனது (ஆன்மா) செழிப்பாகும்போது, நம்முடைய வெளிப்புற உலக வாழ்க்கையில் நாம் செழிப்பைக் காணலாம். நம்மிடமிருக்கும் பணம், சொத்துக்கள் எல்லாம் நம்முடையதல்ல. கர்த்தர் நமக்கு கொடுத்தது. அதை நாம் மற்றவர்ளுக்கு தாராளமனதோடு கொடுத்து உதவி செய்ய பயன்படுத்த வேண்டும்.

*வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.*

*விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.*

*- 2 கொரிந்தியர் 9 : 9, 10*

## தயாளகுணமுள்ள கர்த்தர்

*தரித்திரருக்கு கொடுப்பவன் தாழ்ச்சியடையான் ; தன் கண்களை*

*ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்.*

*- நீதிமொழிகள் 28 : 27*

நாம் ஏழைகளுக்கு உதவி செய்யும்போது, நமக்கு தேவையான எல்லா ஆசீர்வாதத்தையும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோம். அவர்களுக்கு தாராளமாக உதவி செய்ய வேண்டும். ஏழைகளுக்கும், தேவையிலிருப்பவர்களுக்கும் உதவி செய்து, அவர்களுடைய தேவைகளை நாம் சந்திக்கும்போது, கர்த்தருக்கு கடன் கொடுக்கிறோம். அப்படி அவர்கள்மேல் அன்பு செலுத்தி, இரக்கப்பட்டு கொடுத்திருந்தோமானால், கொடுத்ததற்கான பலனை கர்த்தர் நமக்கு திரும்பக் கொடுப்பார் (நீதிமொழிகள் 19 : 17). தேவையோடு இருப்பவர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் அவர்கள் தேவைகளை அறிந்தும், அறியாதவர்கள் போல இருந்து, அவர்களை புறக்கணிக்கக்கூடாது. கருணைக் கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான் (நீதிமொழிகள் 22 : 9). தாராளமாகக் கொடுப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பரந்த மனப்பான்மையோடு, குறுகிய புத்தியில்லாமல், சுயநலமற்று மற்றவர்களுடைய நலனை எண்ணி கொடுப்பவர்கள் தயாள குணமுடையவர்கள்.

## ஏழைகளுக்கு கொடுக்கும் கர்த்தர்

*உங்கள் தேசத்தின் வேளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும், பரதேசிக்கும் அவைகளை விட்டுவிட வேண்டும்.*

*- லேவியராகமம் 23 : 22*

இந்த சட்டமானது ஏழைகள் மற்றும் பரதேசிகளின் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது. தேவன் அவர்கள்மேல் இரக்கமுள்ளவராயும், அன்புள்ளவருமாயிருக்கிறார். நம்மிடம் இருக்கும் நிலம், ஆஸ்திகள் எல்லாவற்றிற்கும் தேவனே சொந்தக்காரராய் இருக்கிறார். அதை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை மாத்திரம் நமக்கு கொடுத்திருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி உணரும் போது தேவனைப் போல கொடுக்கும் மனப்பான்மை-யுள்ளவர்களாக, தயாள குணமுள்ளவர்களாக மாறுவோம். தேவனுடைய



பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய இயல்பான சுபாவங்களையும், தனிப்பட்ட குணாதிசயங்களையும் அறிந்துகொண்டு அவற்றை நம் வாழ்க்கையில் பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவையிலிருப்பவர்களின் தேவைகளை நாம் சந்திக்க வேண்டும் என்று நம் தேவன் நமக்கு கற்றுத் தருகிறார். பயிரை அறுவடை செய்யும் போது, வயலின் எல்லா பகுதிகளையும் அறுக்கக் கூடாது என்றும், தரையில் விழும் தானியங்களையும், பழங்களையும் சேகரிக்கக்கூடாது என்றும், அவைகளை ஏழைகளுக்கும் பரதேசிகளுக்கும் விட்டுவிட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.நாம் ஏழைகளையும், தேவையிலிருப்பவர்களையும் மறந்துபோய், அவர்கள்மேல் அக்கரையற்றவர்களாயிருந்து, அவர்களை புறக்கணித்து அவர்கள் தேவைகளை சந்திக்காமலும், அவர்களுக்கு வேண்டியவற்றை கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் நம் தேவன் நாம் அவர்களுக்கு தயாளகுணமுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார்.

## பரந்த மனப்பான்மை

யூதா தேசத்தில் பஞ்சம் வந்ததால், எலிமேக்கு என்பவன் தனது மனைவியாகிய நகோமியுடனும், தனது இரண்டு மகன்களுடனும் யூதாவிலிருந்து



மோவாப் தேசத்திற்குப் போய் அங்கே இருந்தார்கள். நகோமியின் கணவன் இறந்து போனான். மகன்கள் இருவரும் மோவாபிய ஸ்திரீகளை விவாகம் செய்தனர். பின் நகோமியின் இரண்டு மகன்களும் இறந்து போனார்கள். தன் தேசத்திலே பஞ்சம் நீங்கியதை அறிந்த நகோமி தன் தேசத்திற்கு போக முடிவு செய்து, தன் மருமகள்களிடம் தங்கள் தாய் வீட்டிற்கு செல்லும்படி கூறினாள். முதல் மருமகளான ஓர்பாள் தன் வீட்டிற்கு போய்விட்டாள். ஆனால் அடுத்த மருமகள் ரூத் நகோமியை விடாமல் அவள் கூடவே பெத்லெகேமுக்கு வந்து விட்டாள். அங்கு வாற்கோதுமை அறுவடை நடந்து கொண்டிருந்தது. ரூத் வயலுக்குப்போய் சிதறிக்கிடக்கும் தானியத்தை சேகரிக்கச் சென்றாள். அந்த வயல் போவாஸ் என்னும் மனிதனுடையதாகயிருந்தது. அவன் மிகுந்த ஆஸ்திகளையுடையவனாயிருந்தான். அவன் ரூத்தைப்பற்றியும், அவனது நற்செயல்களையும் தன் வேலைக்காரர்கள் மூலம் அறிந்து கொண்டு, நீ என்

வயலில் தங்கியிருந்து, சிதறும் தானியங்களை உனக்காக சேர்த்துக் கொள்ளலாம். மற்ற வயலுக்கு போக வேண்டிய அவசியம் இல்லை; அறுப்புகாலம் முடியும் வரை நீ இங்கு வேலை செய்யலாம் என்று கூறினான். பின்னும் தன் வேலைக்காரர்களிடம், "அவள் அறுத்த கட்டுகளின் நடுவே இருக்கும் தானியங்களையுங் கூட சேகரித்துக் கொள்ளட்டும், அவளைத் தடுக்க வேண்டாம், அவள் சேகரிக்கும்போது, அவளுக்காக அரிகளிலே சிலதை சிந்த விடுங்கள். அவளை அதட்டாதிருங்கள்" என்று கட்டளையிட்டான். போவாஸ் ரூத்திற்கு எப்படியாக தாராள குணமுடையவனாய் உதவி செய்தான் என்று பாருங்கள். எளியவர்களுக்கு உதவி செய்யும் தாராள குணம் அவனுக்கு இருந்தது. ரூத்தின் தேவையை உணர்ந்து செயல்பட்டான். தன் வேலைக்காரரிடமும், தன் இனத்தாரிடமும் இரக்கமுள்ளவனாக நடந்து கொண்டான். கொடுக்கும் மனதை உடையவனாயிருந்தான். இப்படி உதவி செய்தது மாத்திரமல்லாது, அவளை தனக்கு வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொண்டு, அவளுக்கு நல்லதொரு வாழ்க்கையையும் கொடுத்தான்.

இன்று தனது பிள்ளைகளுக்கு திருமணம் செய்பவர்கள், தனக்கு வரக்கூடிய மருமகனின் அல்லது மருமகளின் உடல் நிறத்தையும், உயரத்தையும், அழகையும், பதவியையும், சம்பளத்தையும் பார்க்கிறார்கள். உள்ளார்ந்த மனுஷனின் குணநலன்களை பார்க்கத் தவறுகிறார்கள். இவர்களது மனது குறுகினது. நாம் தயாள குணமுள்ளவர்களாய் இருந்தால் மாத்திரமே மற்றவர்களின் உள்ளார்ந்த குணநலன்களை அறியமுடியும். ஆனால் போவாசோ ரூத் தன் மாமியார் நகோமியை தன் தாயைப் போல நேசித்ததையும், அவளுடைய நல்ல குணத்தையும், நல்ல நடத்தையையும் முக்கியமாக ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டுடன் இருந்த வாழ்க்கையையும் பார்த்தான். அவன் வெளிப்புறத்தில் உதவி செய்து தயாளமாய் இருந்ததைக் காட்டிலும் உள்ளார்ந்த மனுஷனில் தயாளமாய் இருந்தான் என்பதே முக்கியம்.

*மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள்; உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்?*

*- நீதிமொழிகள் 20 : 6*

தயாள குணமுள்ளவர்கள் தாங்கள் செய்வதை வெளியே சொல்லி தங்களைக் குறித்து விளம்பரப்படுத்தமாட்டார்கள். அந்த தயாள குணம் அவர்களுக்கு செயற்கையாக இல்லாமல், இயல்பானதொரு குணமாக இருக்கும். நாமும் கூட முதலாவது, நமக்குள்ளாக தயாளமாய் இருக்க வேண்டும், அப்பொழுதுதான் வெளிப்புறத்தில் அதை பிரதிபலிக்க முடியும்.



வேதம் முழுவதுமே உள்ளார்ந்த மனுஷனுக்கே எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்முடைய முகத்தை பார்க்கவில்லை, நம்முடைய இருதயத்தையே பார்க்கிறார். வேதத்தை ஒருவன் இரவும், பகலும், உணவைப் புசிப்பது போல படித்து, தியானித்தானென்றால், உள்ளார்ந்த மனுஷன் தயாளமாய் மாறுவான். ரோமர் 12 : 2ல் அப்போஸ்தலனாகிய பவுல் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள் என்று குறிப்பிடுவது என்னவென்றால், வேதத்தை நாம் தியானிக்க, தியானிக்க தேவனுடைய வார்த்தைகள் நம் மனதின் எண்ணங்களையும், நினைவுகளையும் புதிதாக்கி, நம்மை இயேசுவைப்போல மறுரூபப்படுத்தும்.

கர்த்தருடைய ஆவியானவர்தாமே நம்முடனே கூட இருந்து, தயாள குணத்தோடு நாம் மற்றவர்களுக்கு கொடுக்க தயை செய்வாராக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*

*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

***எங்களது முகவரி***

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.



இரண்டு ஆண்டுகளை முடித்து, மூன்றாவது ஆண்டுக்குள்ளாக இந்த பத்திரிக்கை ஊழியத்தில் பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்கின உங்களை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்துவிட்டு மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள்.


---

***உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்***

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

***இணையதளம் :* www.kennedyministries.org**




**அன்பின் அப்போஸ்தலன் சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் எழுதியுள்ள அவரது பரலோக தரிசனங்கள், 'என் பரலோக தரிசனங்கள்' என்று தமிழிலும், 'An Insight into Heaven' என்று ஆங்கிலத்திலும் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. மேலும் 'An Insight into Heaven' என்ற தலைப்பில் DVD (3 Discs)-க்களாக வெளிவந்துள்ளன. எளிமையான (யாரும் புரிந்து கொள்ளலாம்), அருமையான ஆங்கிலத்தில் மிகவும் விரிவாக பத்து மணிநேரம் தன்னுடைய பரலோக தரிசனங்களை சகோதரர் பகிர்ந்துகொண்டுள்ளார். இதை கண்டிப்பாக பாருங்கள். உங்கள் வாழ்க்கை மாறும். அவருடைய புத்தகத்திலிருந்து சிலவற்றை மாதிரிக்காக இங்கே கொடுத்துள்ளோம். *www.jesuscalls.org***

- பரிசுத்த வேதாகமத்தை நான் பேரார்வத்துடன் படிக்க ஆரம்பித்துவிட்ட-படியால், திருமறையின் பக்கங்களை நான் அதிகமாகவும் தவறாமலும் திரும்பத் திரும்ப படித்ததால், ஏழு வேத புத்தகங்கள் பழமையாகிவிட்டன. தற்போது (2002) நான் உபயோகிப்பது எட்டாவது புத்தகம். வேதத்தை வாசிக்கையிலே, தேவனுடைய பரிசுத்தவான்களின் வாழ்வில் காணப்பட்ட குறிப்பிட்ட ஒரு குணாதிசயம் எப்போதும் என்னை வியக்க வைத்தது. ஒவ்வொரு நாளும் தேவனோடு நடப்பதும், பேசுவதும், சஞ்சரிப்பதுமான அவர்களது அனுபவமே என்னை அப்படி வியக்க வைத்தது. நானும் அவ்வாறே கர்த்தரோடு சஞ்சரித்து ஐக்கியம் கொள்ள வேண்டும் என்ற ஒரு பெரும் உந்துதல் எனக்குள் உருவாயிற்று.

- ஒரு காலை வேளையில். அலுவலகம் செல்வதற்காக தயாராகிக் கொண்டிருந்தேன். இன்னமும் நேரம் இருப்பதை உணர்ந்தவனாய், அலுவலகத்தில் வெட்டியாக பொழுதைக் கழிப்பதைவிட இந்த எஞ்சிய நேரத்தை ஜெபத்தில் கழிக்க முடிவு செய்தேன். எனவே, என் எளிய வீட்டிலிருந்த உபயோகிக்கப்படாத சமையலறையில் ஜெபிக்கும்படியாக முழங்கால்படியிட்டேன். அந்த சிறிய இடைவேளையில் பரிசுத்த ஆவியானவர் என்னை மிகவும் சிறப்பான விதத்தில் சந்திக்க முற்பட்டார். சர்வவல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட நான் ஒரு நெருப்பு பந்து என் மீது விழுவதைப்போல உணர்ந்தேன். உண்மையாகவே பரிசுத்த ஆவியின் நிறைவினால் நான் என்னையே மறந்து போனேன். பரத்திலிருந்து ஒரு சத்தம் என்னை "இங்கே (பரலோகம்) வா" என்று சொல்லக் கேட்டேன். பிறகு புரிந்து கொள்ள முடியாத வேறொரு சம்பவம் நடந்தது. என் ஆவி இந்த சரீரத்தைவிட்டு வெளியேறுவதைக் கண்டேன். என் உணர்ச்சி விவரிக்க முடியாத ஒன்றாயிருந்தது. நான் முழங்காலிலிருந்தபடியே, பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களினால் என்னை நிரப்பும்படி அடக்க முடியாத கண்ணீரோடு ஜெபத்தில் மூழ்கியிருப்பதைக் காண முடிந்தது. மறுபக்கம் அதே நேரத்தில் என் சரீரத்திற்கு அருகில் நான் நின்றுகொண்டு என் சரீரத்தை நோக்கி வியப்புடன் பார்ப்பதைக் கண்டேன். இந்த இரு வெவ்வேறு நிலைகளிலும் என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை சரீரத்தில் என்னால் தெளிவாக உணர முடிந்தது. ஒரு பரம கரம் பரலோகத்திலிருந்து என் அருகில் வந்திறங்கியது. ஒரு நொடியில் என்னையும் அறியாமல் அந்த உள்ளங்கையில் உறிஞ்சி கொள்ளப்பட்டேன். பிறகு அந்த கரம் என்னை ஏந்தி கொண்டவாறே விண்வெளிக்குள் நகர்ந்தது.

அந்த கரமானது கடந்து செல்லும்போது வழியில் முதலாவது பரந்த கடல் போன்ற மேகங்கள், பிறகு நட்சத்திரங்கள் வந்தன. உலகத்திலிருந்து பார்க்கையில் மிகச் சிறியதாக தோன்றும் நட்சத்திரங்கள், அளக்க இயலாத மாபெரும் கரடு முரடான மலைச் சிகரங்கள் போல் காட்சியளித்தன. திடீரென்று பெரிய பரப்பளவுள்ள ஒளிமயமான நகரம் போன்ற ஓர் இடம் வந்தது. மெய்யாகவே கடைசியாக நான் பரலோகம் வந்தடைந்துவிட்டேன் என்று எனக்குள் உணர்ந்தேன்.

இந்த இடம், சுட்டெரிக்கும் இவ்வுலகின் சூரிய ஒளிபோல் இராமல், தனித்தன்மை வாய்ந்த இயற்கைக்கப்பாற்பட்ட பேரொளியால் மின்னியது. கோடானகோடி மக்கள் ஆண்டவராகிய இயேசுவின் பேரின்ப பிரசன்னத்தில் மெய்மறந்திருந்தனர். மேலும் இலட்சக்கணக்கான தேவதூதர்கள் ஏறுவதும், இறங்குவதுமாயிருந்தார்கள். ஆண்டவராகிய இயேசுவின் சிங்காசனம் முழு பரலோகத்தில் மையப் பகுதியில் அமைந்ததாய் தோன்றியது. எப்பக்கத்திலுமுள்ள மக்கள் ஆண்டவராகிய இயேசுவைக் கண்டபோது அறிவுக்கெட்டாத வினோதமான அனுபவத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆவியில் அவருடன் 'அன்பின் கயிறு'களால் கட்டப்பட்டதை உணர்ந்தார்கள். ஒரு அதிசயமும், அற்புதமுமான காட்சியாயிருந்தது. அண்டசராசரங்களிலேயே, பரலோகம்தான் மிகச் சந்தோஷமான இடம் என்பதில் சந்தேகமில்லை.

*- தொடரும்*




## கேட்கிறதைக்
## கவனியுங்கள் ⑧

*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது ; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.*

*- யோவான் 12 : 48*

இங்கே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மூன்று காரியங்களைக் குறிப்பாய் உணர்த்துகிறார். 1) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, 2) அவரது வார்த்தை 3) கடைசி நாளில் நியாயத்தீர்ப்பு.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததன் நோக்கம், பாவிகளை இரட்சிக்கவே ; பாவிகளை அழிக்க அல்ல. தேவன், முதலில் மோசே மூலம் நியாயப் பிரமாணத்தைக் கொடுக்கிறார். நியாயப் பிரமாணம், பாவம் இன்னது என்பதை சுட்டிக் காட்டுகிறது. நியாயப் பிரமாணத்தைக்கொண்டு மனிதனால் பாவத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. அதனால் தேவனே மாம்சத்தில் ஒரு மனுஷனாய் பூமிக்கு வந்து, எல்லா மனுஷர்களின் பாவத்தையும் தன்மேல் சுமந்து, சிலுவையில் தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து பாவத்தை மேற்கொண்டு, மனுஷனை பாவத்திலிருந்து விடுதலையாக்கி, நீதிமானாக்குகிறார். இயேசு என்றாலே இரட்சிப்பு என்று அர்த்தம். இயேசு கிறிஸ்து, மனுஷனை நியாயந்தீர்க்க வரவில்லை. அவர் பேசின வார்த்தைகளே கடைசி நாளிலே நம்மை நியாயந் தீர்க்கும்.

விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை, இயேசு கிறிஸ்துவிடம் கொண்டுவந்து, அவளைப்பற்றிய நியாயத்தை அவரிடம் கேட்கும்போது, உங்களில் பாவம் செய்யாதவன் அவள் மீது கல்லெறியக்கடவன் (நியாயப் பிரமாணத்தின்படி) என்று சொல்கிறார். அவர்களில் பாவம் செய்யாதவர்கள் இல்லாததால் எல்லோரும் போய்விடுகிறார்கள். இப்பொழுது பாவம் செய்யாதவர் அவர் ஒருவர் மாத்திரமே. ஆனால், அவர் அந்த ஸ்திரீயைப் பார்த்து, நானும் உன்னை நியாயந் தீர்ப்பதில்லை, இனிப் பாவஞ் செய்யாதே என்கிறார்.



தாம் உண்டாக்கின மனிதனை அழிப்பது அல்ல தேவனுடைய சித்தம். பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், நோயிலிருந்தும் மனிதனை விடுதலையாக்குவதே தேவனுடைய சித்தம்.

இந்தப் பூமியிலே நமக்கு முன்பாக நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நாம், நம்முடைய சுய எண்ணத்தின்படி நன்மையை செய்யலாம் அல்லது தீமையை செய்யலாம். நம்மை நல்வழிப்படுத்தவே வேதாகமத்தை நம் கரத்தில் தேவன் கொடுத்திருக்கிறார். இந்தத் தேவனுடைய வார்த்தையின்படி நடந்தோமானால், நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் நியாயந் தீர்க்கப்பட்டு பரலோகத்தை சென்றடையலாம். இந்த தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் நடந்தோமானால், நியாயத் தீர்ப்பு நாளிலே நாம் நியாயந் தீர்க்கப்பட்டு நரகத்தைச் சென்றடைய நேரிடும். நாம், பரலோகத்துக்கு செல்வதும், நரகத்துக்கு செல்வதும் பூலோகத்திலே நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதை அடிப்படையாக வைத்தே தீர்மானிக்கப்படும். நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான வழிகாட்டியே வேதாகமம். தேவன் அவரது வார்த்தையையே இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமிக்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து பேசும்போதெல்லாம், நான் சுயமாய் ஒன்றும் பேசவில்லை, பிதா எனக்கு சொன்னதையே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்கிறார். பிதாவின் சித்தத்தையே இயேசு கிறிஸ்து பேசுகிறார். வேதாகமத்தில் எந்தப் பகுதி புரியவில்லையென்றாலும், அது சம்பந்தமாக இயேசு கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறார் என்று, நான்கு சுவிசேஷங்களிலும் போய் படித்தீர்களென்றால் போதும், உடன்தானே உங்களுக்கு புரிந்துவிடும். நம் அன்றாட வாழ்க்கையிலும், ஏதாவதொரு காரியத்திலே தேவனுடைய சித்தம், தேவனுடைய நடத்துதல் தெரிய வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்து உங்களுடைய இடத்திலிருந்தால் என்ன செய்வார் என்று யோசித்துப் பாருங்கள். அதற்கு விடையாகக் கிடைப்பதே தேவனுடைய சித்தம். வேறு எந்த ஜனத்திற்கும் கிடைக்காத, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே கிடைத்த சிலாக்கியம் : தேவனே, மாம்சத்தில் ஒரு மனுஷனாய் (இயேசு கிறிஸ்துவாய்) இந்த பூமிக்கு வந்து நமக்கு முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து காண்பித்திருக்கிறார். மனுஷனுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் பேசி, அதை மனுஷனுடைய கரத்தில் கொடுத்திருக்கிறார்.

தேவன், எல்லாவற்றையும் தம்முடைய வார்த்தையினாலேயே உண்டாக்கினார். மனுஷனை தம்மைப்போல (சாயலில்) உண்டாக்கி, தானும் மனுஷனைப்போல வந்து மனுஷனோடு மனுஷனாய் வாழ்ந்து, எல்லாக் காரியங்களையும் வார்த்தைகளால் மனுஷனுக்குக் கொடுத்து பரலோகம் சென்றிருக்கிறார். இப்போது வார்த்தையாய் தேவன் நம்மோடு இருக்கிறார். இந்த வார்த்தை சொல்லுவதைக் கேட்டு, அதன்படி நடந்தோமென்றால் நாமும் இயேசு கிறிஸ்துவோடு பரலோகம் சென்று அவரோடு சஞ்சரிக்கலாம். தேவனுடைய வார்த்தையை வைத்துத்தான் நியாயத்தீர்ப்பு நாளிலே, நாம் இந்த பூமியிலே வாழ்ந்த வாழ்க்கை நியாயந்தீர்க்கப்படும். தேவனுடைய வார்த்தையின்படி நடப்போம், பரலோகம் சென்று இயேசு கிறிஸ்து என்னும் நம் பரம தகப்பனோடு சஞ்சரிப்போம். கேட்கிற வார்த்தையைக் கவனியுங்கள்.

**- தொடரும்**